பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**26 03 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

**2.** தமிழகம் உள்ளிட்ட தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் பறக்கும் படையினர் இதுவரை **400** கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்துள்ளனர்.

**3.** சாலை பாதுகாப்புக்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

**4.** எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, 7 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

**5.** **20** வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசியா கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா - பாகிஸ்தானை வென்றது.

- இனி விரிவான செய்திகள் -

<<<<<>>>>>>

கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

வேட்புமனுக்களை விலக்கிக் கொள்வதற்கான காலஅவகாசம் இன்று முடிவடைந்ததையடுத்து, இந்த வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கை மே மாதம் 4ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<>>>>>>

தேர்தல் பறக்கும் படையினர் தமிழகம், கேரளம், அஸ்ஸாம், மேற்குவங்கம் மற்றும் புதுச்சேரியில் 400 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்தலை நேர்மையாகவும், நியாயமாகவும் நடத்த ஐந்தாயிரத்து 173 பறக்கும் படையினர் செயல்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐந்தாயிரத்து 200 நிலை கண்காணிப்புக்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுவரை 17 கோடியே 44 லட்சம் ரூபாய் ரொக்கமும், 37 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பிலான மதுபானங்களும், 23 கோடி ரூபாய் மதிப்பிலான ஆபரணங்களும், 163 கோடி ரூபாய் மதிப்பிலான இலவசப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் சி-விஜில் இணையதளத்தில் 70 ஆயிரத்து தொள்ளாயிரத்து 44 புகார்கள் பெறப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

புதுச்சேரியில் அனைத்துப்பகுதிகளிலும் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் நோக்கில், ட்ரோன் மூலம் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரி திரு பி ஜவஹர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டிலேயே முதல் முறையாக தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ட்ரோன் தொழில்நுட்பம் ஈடுபடுத்தப்படுவதாக தெரிவித்தார்.

புதுச்சேரியில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் கண்காணிப்பை மேற்கொள்ள விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

15 நாடுகளை சேர்ந்த தேர்தல் அமைப்புகளின் பிரதிநிதிகள் புதுச்சேரி வரவுள்ளதாகவும், சட்டப்பேரவைத் தேர்தல் நடவடிக்கைகளை அவர்கள் பார்வையிட உள்ளதாக தெரிவித்தார்.

பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் புழக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில், பறக்கும் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும் திரு ஜவஹர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரான்ஸ் நாட்டின் வெளியுறவு அமைச்சர் Jean — Noel Barrot-ஐ சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

ஜி.7 அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக, பிரான்ஸ் சென்ற அவர், மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழலுக்கு தீர்வு காண்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிக்க உள்ளார்.

<<<<<>>>>>>

சாலை பாதுகாப்புக்கு அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சாலை பாதுகாப்பு இயக்கம் தொடர்பான நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், விபத்துகள் ஏற்படும் இடங்களை கண்டறிந்து அதனை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

சாலை பாதுகாப்புக்காகவும், வடிவமைப்புக்காகவும் 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் வாகன தொழில் துறை உலக அளவில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக அவர் கூறினார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் இத்துறையை உலகிலேயே முதலிடத்திற்கு கொண்டுவர தொலைநோக்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு நிதின் கட்கரி தெரிவித்தார்.

சாலை விபத்துகளை தவிர்க்கும் வகையில், ஒவ்வொரு வாகனத்திலும் ஆறு **Air Bag** இருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வாகன ஓட்டுநர் உரிமம், டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், **200** ஓட்டுநர் பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அனைவரும் சாலை விதிகளை பின்பற்ற வேண்டும் என்று திரு நிதின் கட்கரி கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

ஸ்ரீ ராமநவமி இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு ராஜ்நாத் சிங், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>>

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, தமிழக மீனவர்கள் 7 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரத்தை சேர்ந்த இந்த மீனவர்களை இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — கார்த்திகேயன் — 40 Sec. )*

<<<<<>>>>>>

நாட்டில் போதுமான அளவுக்கு பெட்ரோல் மற்றும் சமையல் எரிவாயு கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய பெட்ரோலிய இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அனைத்து பெட்ரோல் பங்குகளிலும் போதிய அளவு பெட்ரோல், டீசல் உள்ளதாக தெரிவித்துள்ளது.

பெட்ரோலிய பொருட்கள் பற்றாக்குறை குறித்த தவறான செய்திகளை நம்ப வேண்டாம் என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

உலகெங்கும் உள்ள 41 இடங்களிலிருந்து கச்சா எண்ணெய் இந்திய துறைமுகங்களுக்கு கொண்டு வருவதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் முழுவீச்சில் செயல்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு பற்றாக்குறை இல்லை என்ற கூறியுள்ள அமைச்சகம், அதன் உற்பத்தி 40 சதவீதம் அதிகரித்து, 50 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

எண்ணெய் நிறுவனங்கள் நாள்தோறும் 50 லட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகித்து வருவதாக தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து 8 லட்சம் மெட்ரிக் டன் சமையல் எரிவாயு இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

கடல்சார் வர்த்தகம் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் கப்பல்களின் இயக்கத்தை கண்காணித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கப்பல் போக்குவரத்துத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடல் பயணம் மேற்கொண்டுள்ள மாலுமிகள்

பாதுகாப்பாக இருப்பதாக தகவல்கள் வந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் 39 இந்திய மாலுமிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை மொத்தம் 675-க்கும் மேற்பட்ட மாலுமிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பான கடல் பயணத்திற்கு தேவையான அறிவுரைகளை கப்பல் போக்குவரத்து அமைச்சகம் அவ்வப்போது வழங்கி வருவதாகவும் கூறியுள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் வளைகுடா மற்றும் மேற்காசிய நாடுகள் பகுதியில் நிலவும் சூழ்நிலையை இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருவதாக தெரிவித்துள்ளது.

இந்த நாடுகளுக்கு விமான போக்குவரத்து படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளில் இருந்து 4 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக இந்தியா வந்துள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

கருங்கடல் பகுதியில் துருக்கி நாட்டை சேர்ந்த எண்ணெய் கப்பல் அல்துரா மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

துருக்கி போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு அப்துல் காதர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு லட்சத்து 40 ஆயிரம் டன் கச்சா எண்ணெய் ஏற்றிவந்த கப்பல் தாக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

இதில் பயணித்த 27 மாலுமிகளும் பாதுகாப்பாக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலை யார் நடத்தியது என்பது குறித்து தகவல் வெளியாகவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசியா கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா - பாகிஸ்தானை வென்றது.

மாலத்தீவில் நடைபெற்ற இப்போட்டியில், இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

--------------

இந்தியாவில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

வெஸ்ட் இண்டீஸ், ஜிம்பாப்வே, ஆஸ்திரேலியா, இலங்கை அணிகள் இந்தியாவுக்கு எதிராக 22 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட உள்ளன.

இந்தியா வரவுள்ள வெஸ்ட் இண்டீஸ் அணி வரும் செப்டம்பர் 27-ஆம் தேதி தொடங்கவுள்ள கிரிக்கெட் தொடரில் 3 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும், ஐந்து டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாட உள்ளன.

இலங்கைக்கு எதிராக தலா மூன்று ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும், டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளிலும் இந்தியா விளையாட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜிம்பாப்வேக்கு எதிராக மூன்று ஒருநாள் தொடரிலும் இந்தியா விளையாட உள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஐந்து டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா அடுத்த ஆண்டு விளையாட உள்ளது.

**இரு அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னையில் அடுத்த ஆண்டு ஜனவரி 29-ஆம் தேதி நடைபெறும் என்றும் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.**

**--------------**

**நாக்பூரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர், Zeel தேசாய், Kashish Bhatia ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.**

**<<<<<END>>>>>>**